That was the assurance given by the late Anna four years ago. Then the late Thiru Govindaswamy had also given an assurance to the effect: 'I understand your difficulties and your difficulties stand on a different footing. You have got not only intelligence but also physical intelligence and you have also got a hazardous job and therefore, taking into consideration the occupational hazard, the matter would be completely reviewed.' As only a sum of Rs. 12 lakhs is all that is necessary I would be happy if the Hon. Chief Minister would concede their demand. Even during the training period they have to spend and also the entire period of study is 5 years and 11 months. Therefore, I would be very happy and it would be very nice if the Hon. Chief Minister would give some sort of assurance that the matter would be reviewed again.

I do not want the Hon. Minister to take a rigid stand in regard to this matter. Sir, on this issue I am also personally involved. Nearly 800 students are in my constitutency and so I am very anxious that the whole thing should be settled in a very smooth manner. Even the Hon. Chief Minister who is also the Finance Minister and the Hon. Minister can jointly come to a decision and give some sort of assurance so that the agitation can be called off. In fact the students wanted to take out a procession but I advised them not to do so and that two or three students can meet the Hon. Minister along with Leaders of Opposition Parties and one or two members of the Ruling Party, as that will facilitate a compromise formula being evolved and that the agitation can be called off. With these words, I wind up my speech.

திரு. க. சுப்பு: பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவக் கல்லூரியில் பயிற்சி பெற்ற மருத்துவர்களுக்கு இணையாக தாங்களும் நடத்தப்பட வேண்டுமென்ற கோரிக்கையை கால்நடை மருத்துவர்கள் அரசாங்கத்தின் முன்னாலே வைத்து போராட்டங்களும் நடத்தியிருக்கிறார்கள். 1971ஆம் ஆண்டிலே அவர்களுக்குச் சில வாக்குறுதிகளும் அளிக்கப்பட்டன. இப்பொழுது கூட பஞ்சாப், பீகார், அரியானா போன்ற மாநிலங்களில் அவர்கள் இணையாகத்தான் நடத்தப்படுகிறார்கள் என்பதைப் புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன. கல்விக்காக கால்நடை மருத்துவர்கள் செலவழிக்கின்ற கால அளவு, பணச் செலவு, கடினமாக வேலை செய்வது, அவர்கள் கிராமப்புறங்களுக்குச் சென்று கஷ்டங்களுக்குள்ளாகிற நிலைமை, அவர்கள் தனியாக பிராக்டீஸ் செய்ய முடியாத நிலைமை இவற்றையெல்லாம் பார்க்கிறபொழுது மருத்துவர்களுக்கு இணையாக கால்நடை மருத்துவர்களை நடத்துவதுதான் சரியென்று ஒப்புக்கொண்டிருந்தாலும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. பீகார், பஞ்சாப், அரியானா போன்ற மாநிலங்களிலே இணையாக நடத்தப்படுகின்ற நிலைமையிலேயும்கூட, அமைச்சர் அவர்கள் இது வளர்க்கப்பட வேண்டிய ஒரு துறை என்று 27ஆம் தேதி அன்றுதான் குறிப்பிட்டிருக்கிறார்கள், வளர்க்கப்படவேண்டிய துறையிலே பணியாற்றுகின்ற அவர்கள் மனத்தளர்ச்சியோடும் அதிருப்தியோடும் இருக்கிறார்கள், அதிருப்தி அடைந்

திருக்கின்ற மருத்துவர்களைக்கொண்டு எந்த அளவுக்கு நோயைத் தீர்க்க முடியும் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். எனவே அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிற மனச்சோர்வையும், அதிருப்தியையும் போக்கக்கூடிய வகையிலே அரசாங்கம் பரிசீலனை செய்யவேண்டும். ஒவ்வொரு முறையும் அவர்கள் போராட்டம் நடத்துவதும் தீர்வு காணமல் இருப்பதும்தான் நடந்துகொண்டிருக்கிறது.

அவர்களுக்குத் தேர்வுகள் நடந்து கொண்டிருக்கின்றன. தேர்வுகளைக்கூட புறக்கணித்துவிட்டு அவர்கள் கோட்டைக்கு ஊர்வலமாக வருவதற்கு இருந்தார்கள். எனவே அவர்களுடைய தேர்வுகள் புறக்கணிக்கப்படாமல் இருக்கக்கூடிய வகையில் இதர மாநிலங்களிலே கொடுக்கப்பட்டிருப்பதைப்போன்று மற்ற மாநிலங்களுக்கு நம்முடைய மாநிலம் சளைத்தவர்கள் அல்ல என்ற அடிப்படையிலே அவர்களை இணையாக நடத்தவேண்டுமென்ற பிரச்னையைப்பற்றி விவாதிக்க இந்த அவையின் நடவடிக்கைகளை ஒற்றிவைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எ. சுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, இந்தப் பிரச்னை குறித்து ஏற்கெனவே இந்தத் தொழிலிலே ஈடுபடுகிறவர்களுக்கும் மற்ற அஸிஸ்டெண்ட் சர்ஜன்களுக்கும் இருக்கிற சம்பள ஏற்றத்தாழ்வுகள் குறைக்கப்பட வேண்டுமென்ற அளவிலே ஒரேமாதிரியாக சீராகச் சம்பளம் அளிக்கப்படவேண்டுமென்று கேட்டிருந்தார்கள். ஆனால் அந்த வித்தியாசம் அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது இந்த பே கமிஷன் மூலமாக. ஆகவே அவர்களுக்கு மனக்குறை இருப்பது இயல்பு. டாக்டர் ஹாண்டே அவர்கள் கூறியதைப்போல் ஏற்கெனவே சில வாக்குறுதிகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே அவற்றை நிறைவேற்றி இந்தக் கால்நடைப் பராமரிப்பானது வளர வேண்டிய ஒரு துறை, அந்தக் கால்நடைச் செல்வம் வளர வேண்டுமானல் அதற்கான மருத்துவர்களின் பணி இன்றியமையாததாகும். ஆகவே அரசு இந்தக் குறைகளைப் போக்குவதற்கு முன்வர வேண்டும், அதுகுறித்துக் கருத்துக்களைச் சொல்வதற்கு இந்த அவையின் நிகழ்ச்சிகளை ஒற்றிவைத்து விவாதித்தால் பயனுள்ளதாக இருக்கும் என்பதை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு அங்கத்தினர்கள் கூறியதைப்போன்று இது வளர்ந்து வரும் துறையாகும். இப்படி வளர்கின்ற நிலையில் இருக்கின்ற இந்தத் துறைக்கு அரசாங்கத்தின் ஆதரவைக் கொடுக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். இந்த வேலை நிறுத்தம் ஏற்பட்டிருக்கும்பொழுது தேர்வு காலமாக இருக்கிறது. அதோடு நமது மாநிலத்திலே கால்நடை மருத்துவர்களுக்காக இருக்கும் ஒரே நிறுவனம் இந்த ஒரு கல்லூரி மட்டும்தான். ஆகவே, இந்தக் கல்லூரியில் இம்மாதிரி ஒரு நிகழ்ச்சி இந்தக் காலக்கட்டத்தில் இருப்பது வருந்தத்தக்கது. ஆகவே, இதை உடனடியாகத் தீர்க்க வேண்டிய கடமை அரசாங்கத்திற்கு இருக்கிறது. இந்தப் பிரச்னையைப் பேசித் தீர்க்க வேண்டுமென்பதற்காக மற்ற அலுவல்களை ஒற்றிவைத்து விவாதிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பலர் இன்றைக்கு கால்நடை மருத்துவக் கல்லூரியில் பயிலும் மாணவர்கள் நேற்று காலைமுதல் வேலை நிறுத்தம் செய்து கல்லூரிக்குச் செல்லாமல் தங்களுடைய மனவருத்தத்தை வெளிகாட்ட வேண்டுமென்ற முறையில் ஊர்வலம் வந்திருக்கும் அந்த நிகழ்ச்சியை அடிப்படையாக வைத்து இதை உடனடியாகக் கவனிக்க வேண்டுமென்பதை வலியுறுத்த வேண்டுமென்பதற்காக இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தை இங்கே கொண்டு வந்திருக்கின்றார்கள்.

நேற்று காலையிலிருந்து இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளைப்பற்றி எண்ணி அந்த மாணவர்கள் சமாதானம் அடைவதற்கான விளக்கங்களைச் சொல்வதற்காகவும் நானும் இந்தத் துறையிலே உள்ள இயக்குநர் அவர்களும், செயலாளர் அவர்களும் முயற்சி எடுத்துக்கொண்டுள்ளோம். நேற்று காலையிலிருந்து அந்த மாணவர்கள் எங்களைச் சந்திக்கவோ அல்லது இயக்குநரை சந்தித்துப் பேசவோ அல்லது செயலாளரைப் சந்திக்கவோ விரும்பவில்லை என்ற கருத்து வெளியிடப்பட்டிருந்தது. ஆனால் நல்ல வேளையாக ஊர்வலம் வந்தபிறகு எங்களைச் சந்திப்பதற்கு ஒப்புக் கொண்டு இன்றைக்கு ஏறத்தாழ 10, 15 மாணவர் பிரதிநிதிகள் காண வந்திருக்கிறார்கள்.

ஒரு கருத்துக்கூட தெரிவிக்கப்பட்டது. அந்த மாணவர்கள் அமைச்சரைப் பார்த்தால் இன்னின்ன மாணவர்கள் தலைமை வகித்தார்கள் என்று அவர்கள் பழிவாங்கப்படுவார்கள் என்ற பயம் இருந்ததாகச் சொன்னார்கள். நானும் தெரிவித்தேன். எந்த மாணவர் பிரதிநிதி எங்களிடத்திலே பேசினாலும், எந்தப் பிரச்சினையை விளக்கினாலும் அவர்கள்மீது அதற்காக எந்த நடவடிக்கையையும் அரசோ அல்லது இலாக்காவோ எடுக்காது, எனவே பாதுகாப்பைப்பற்றி கவலைப்படாமல் அவர்கள் பிரச்சினையைப் பேசலாம் என்று தெரிவிக்கப்பட்டு, இப்பொழுது வந்திருக்கிறார்கள். அவர்களிடத்திலே நான் பேசிக்கொண்டிருந்துவிட்டு இடையிலே ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்த அங்கத்தினர்களுக்கு மதிப்பளிக்க வேண்டுமென்பதற்காக இடையிலே இதை விளக்கிக் கொண்டிருக்கிறேன்.

உண்மையிலேயே இந்தப் பிரச்சினை நான் பேசியதிலிருந்து, பிறந்தது என்று சொல்வது வருந்தத்தக்கது. நேற்று முன்னாள் இந்த மானிய விவாதத்தில் நான் பேசியபொழுது மாற்றுக் கட்சி அங்கத்தினர்கள் சொன்னார்கள். சமநிலை சம்பளம் மனித இயல் மருத்துவர்களுக்கு அளிப்பது போன்று அளிக்கப்பட வேண்டுமென்று சொன்னார்கள். எப்பொழுது ஒரு அரசாங்கம் எந்தவொரு கொள்கையை ஏற்றுக்கொண்டு சட்டமன்றத்தில் சொன்னாலும், அப்படிச் சொன்னதற்குப் பிறகு அது உறுதிமொழியாகி, அஷ்யூரன்ஸாகி, அதற்குப் பிறகு அந்த உறுதிமொழியிலிருந்து விலகினால் அது அரசாங்கத்தின் மீது குற்றச்சாட்டாகும். எனவே

உறுதி மொழியை அளிக்காமல் அதற்கு முன் உள்ள நிலைமையை வலியுறுத்துவதுதான் அரசாங்கத்தின் மரபு Statns pιo உள்ள நிலையை —ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள கொள்கையை விளக்குவதுதான் முறைமை.

அந்த நிலையில் மனித இயல் மருத்துவர்களுக்கு அளிக்கும் அதே சம்பளம் அளிக்கபப-வேண்டுமென்று சொன்னபோது எற்கெனவே முதல் ஊதியக் குழு 1961-லே நியமிக்கப்பட்ட குழுவும் அதற்குப் பிறகு அண்மைக் காலத்திலே நியமிக்கப்பட்ட இரண்டாவது ஊதியக் குழுவும் இந்தப் பிரச்சினையை நன்றாகப் பரிசீலனை செய்து அவர்கள் படிக்கும் படிப்பின் கால அளவுகளையெல்லாம் ஒப்பிட்டு ஒரே சமம் என்று வைப்பதற்கு இடமில்லை. அப்படி வைத்தால் வேறு சில பட்டதாரிகளையும் அதே நிலையில் வைக்கநேரிடும் என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள்.

ஆகவே அது விரிவான பிரச்சினையாகிவிடும் என்பதால் நேற்று முன்னாள் பேசும்பொழுது சொன்னேன். "அவர்களுடைய குறைகளைப் போக்கவும், அவர்களிலே நீண்ட காலமாகப் பணியாற்றுபவர்களுக்கு உயர்ந்த ஊதியத்திலே பதவி கிடைக்கும் வகையில் அதிக வாய்ப்பை ஏற்படுத்தவும் அரசு முயற்சியெடுக்கும், சம நிலை என்பதை ஒப்புக் கொள்வதற்கில்லை, அதற்கு காரணம் படிக்கும் காலத்திலுள்ள வேறுபாடு" என்று இன்றைக்குக் கூட மாணவர்கள் என்னிடத்தில் பேசும்பொழுது $6\frac{1}{2}$ ஆண்டுகாலம் படிக்கிறோம் என்று சொன்னார்கள். அவர்கள் வெளியிட்டிருக்கும் நோட்டீஸ் அறிக்கையிலும் நாங்கள் படிப்பது $6\frac{1}{2}$ ஆண்டுகள் என்று கூறுகிறார்கள். நான் அந்த மாணவர்களைக் கேட்டேன். சட்டப்படி அதாவது பல்கலைக்கழக விதிமுறைப்படி $5\frac{1}{4}$ ஆணடுகள் படிக்கிறீர்கள், அதற்குப் பிறகு இந்த இடைகாலத்தில் பண்ணையிலே பயிற்சிபெற விடுமுறை காலத்தில் எமெட்டு மாதங்கள், ஒன்றே முக்கால் மாதம் வீதம் நீங்கள் அனுபவம் பெறுகின்றீர்கள், அதை நேரடிப் படிப்புக கணக்கில் பல்கலைக்கழகம் எடுக்காது, இருந்தாலும் 5 ஆண்டு 10 மாதம் என்ற அளவில் செலவழிக்கும் முறையிருக்க இப்படி $6\frac{1}{2}$ ஆண்டுகள் என்று சொன்னால் முறையா என்று கேட்டதற்கு அது ஏதோ தவறு என்று தெரிவித்தார்கள். அவர்களும் தங்களுடைய நிலையை உணர்கின்றார்கள். அரசாங்கமும் மாணவர்களைப் பொறுத்தவரையில் அவர்களுடைய நல்லெண்ணத்தையும், அவர்களால் நாட்டிற்கு கிடைக்கவேண்டிய எதிர்காலப் பலனையும் கணக்கிட்டு சமநீதி—சம நிலை அல்ல—ஒரு ஜஸ்டிஸ் கிடைக்கும் அளவில் அவர்களின் குறைகளைப் போக்குவதற்கு அக்கறை கொண்டுள்ளது என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

படிக்கும் கால அளவிற்கும் அவர்களுக்கு கிடைக்கும் பயிற்சியின் கால அளவிற்கும் ஏற்ப குறைகளை போக்க, முயற்சிப்போம். முன்னரும அந்தக் குறைகளைத் தெரிவித்திருக்கிறார்கள். அவைகளைப்

போக்கும் அளவிற்கு இன்றைக்கு அரசாங்கம் தானகச் சம்பள விகிதங்களை அறிவிப்பதில்லை, அமைச்சரோ அல்லது முதலமைச்சரோ கூட இன்னருக்கு இந்தச் சம்பளத்தை இப்பொழுது மாற்றியிருக்கிறேம் என்று அறிவிப்பது அரசாங்கத்திற்கு முறையும் அல்ல. எல்லா ஆட்சிகாலத்திலும் சம்பளக் குழுவினர்தான் பரிசீலனை செய்வார்கள். இன்னும் சில துறைகளிலும் சிறு சம்பள வேற்றுமைகள், அனுமலிஸ் இருந்தால் அவைகளைக் களைவதற்கு அரசு அக்கறையோடு, "Single Member Commission" என்று தலைமைச் செயலாளரை நியமித்து 2, 3 மாத காலத்தில் பரிகாரம் காண்பதற்காக ஏற்கனவே ஏற்பாடு செய்திருக்கிறது. ஆகவே இந்த மாணவர்களின் பிரச்னைகளையும், அவர்கள் சொல்லும் வேண்டுகோளையும் அந்த கமிஷன் அதற்காக நியமிக்கப்பட்ட அதிகாரி பரிசீலனை செய்ய வேண்டுமென்று இந்தத் துறையின் சார்பாகக் கேட்டுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

அண்ணு அவர்கள் சில ஆண்டுகளுக்கு முன்னர் அவர்களுடைய தனிப்பட்ட சிரமத்தை கணக்கில் வைத்து, கால்நடைகளுக்கு மருத்துவம் செய்யும்போழுது விபத்து ஏற்பட்டால் ரிஸ்க் அலவன்ஸ் வழங்குவதற்காக கூறிய கருத்தை டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னுர்கள். ரிஸ்க் அலவன்ஸ் என்பது மாதாமாதம் வழங்கப் படக்கூடிய அலவன்ஸாக இருந்தால் அதனுடைய பொருளையே அது இழந்து விடும். ஆகவே, அப்படிப்பட்டவர்களுக்கு ஒரு பாதுகாப்பு அளிக்க, "Any risk because of their duty" என்னும் வகையில். ஏற்படுகிற எந்தவிதமான விபத்துக்கும் பரிகாரம் தருவதற்கு அரசாங்கம் நிச்சயமாக முயற்சிக்கும். விபத்துக்கு அல்லது தொல்லைக்கு அல்லது ஏதாவது ஒரு துன்பத்திற்கு ஆளானலும் அவர்களால் பணி செய்ய முடியாத நிலை ஏற்படினும் பரிகாரம் தருவது முறையாகும். இது மக்களின் நலத்தை கருதும் நல்ல அரசினுடைய குறிக்கோளாக இருக்கும். இன்ஷ்யூரன்ஸ் திட்டம் போன்ற ஒரு குறிக்கோளை இதிலே எப்படி நிறைவேற்றலாம் என்பதை நிச்சயமாகக் கருதலாம். வேறு எந்த தனிப்பட்ட சிரமம் இருந்தாலும் அவற்றையெல்லாம் இந்தக் குழு, ஒன மேன் கமிஷன் பரிசீலனை செய்யும். அரசாங்கம் மாணவர்களிடம் பரிவோடுதான் நடந்து கொள்ளும். எப்படிப்பட்ட மாணவர்களாக இருந்தாலும் அவர்கள் இளம் வயதினர், ஆகவே அவர்களுக்கு, என்னைப் போல் வயதானவர்கட்கே எனக்கே கூட சில நேரங்களில் கோபம் வருகிறது என்றல், மாணவர்களுக்குக் கோபம் வருவது இயற்கைதான். அந்த நேரத்தில் டாக்டர் ஹாண்டே அவர்களும் மற்றவர்களும் அவர்களுக்கு இருக்கின்ற நிலைமைகளை விளக்கினல் அவர்களுக்கு கோபம் வந்திருக்காது. ஏனென்றல் வேண்டுமென்றே மாணவர்களுக்கு குறை வைக்க அரசு எண்ணுவதில்லை. ஒரு 5 லட்சம், அல்லது 10 லட்சம் அதிகம் செலவாகிறது என்பதால் நியாயத்தை அரசாங்கம் மதிக்க தவருது. அந்த முறையிலே அவர்களது குறைகளைப் போக்க இந்த ஆண்டுகூட எந்தெந்த விதமாக அந்தக் கால்நடை மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கு எதிர்

காலத்தில் நல்வாய்ப்புகளை உருவாக்க முடியும் என்று எண்ணிப் பார்த்து கல்வி வளர்ச்சிக்கும், ஆராய்ச்சித் துறை பெருக்கத்திற்காகவும் பல கடமைகளை நாம் நிறைவேற்றிக்கொண்டே வருகிறோம். ஆகவே, அவர்களுடைய குறைகள், வேண்டுகோள் இவற்றை நிச்சயமாக அரசு பரிசீலிக்கும்என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நேற்றுக் காலையில்கூட இந்த மாணவர்கள் ஓரளவு அரசாங்கம் இதை ஒரு சட்டப் பிரச்சினையாகக் கருதும் அளவுக்கு ஒரு நிலைமையை உண்டாக்கினார்கள். கல்லூரிக் கதவை இழுத்து மூடிவிட்டார்கள். சூர்க்காவிடமிருந்து சாவியை வாங்கித் தாங்களே வாயில் கதவைப் பூட்டிக் கால்நடைகளுக்குச் சிகிச்சை அளிக்க முடியாத அளவுக்கும், டாக்டர்கள் உள்ளே செல்ல முடியாத அளவுக்கும், ஏவலர்கள் உள்ளே செல்ல முடியாத அளவுக்கும் செய்தனர். தாங்கள் வேலை நிறுத்தம் செய்ததோடு மட்டுமல்லாமல் இந்தக் காரியத்திலும் அவர்கள் ஈடுபட்டார்கள். மாணவர்கள் மன அமைதி பெறட்டும், சாவியை அவர்கள் தந்துவிடுவார்கள் என்று எதிர்பார்த்திருந்த நிலையில் நேற்று இரவில் சாவியைத் திரும்பக் கொடுத்துவிட்டார்கள். அந்த மாணவர்கள் அரசாங்கத்தின் நல்லெண்ணத்தைப் புரிந்துகொள்ளாமல் தவறான வழியில் சென்றாலுங்கூடச் சாவியைத் திரும்பத் தந்ததற்காக மகிழ்ச்சியடைகிறேன்.

இரண்டு மூன்று நாட்களுக்குத் தற்போது கல்லூரி மூடப்பட்டிருக்கிறது. கல்லூரி மூடப்பட்டிருப்பது மாணவர்கள் தேர்வுக்குப் படிப்பதற்காக மூடப்பட்டதாக மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டு இந்த மூன்று நாட்களையும் நல்ல முறையில் பயன்படுத்தி தேர்வை எழுத முன்வரவேண்டும். தேர்வு நடத்துவது என்றால் பெருஞ் செலவில் நடத்தப்படுகிறது. ஒரு தேர்வு எழுதும் வாய்ப்பு தவறி விடுமானால் மறுபடியும் வாய்ப்புக் கிடைப்பது அரிது. அரசாங்கத்தின் சார்பில் குறைகளை, தனிப்பட்ட வகையான குறைகளை—ஸ்பெஷல் டைப்ஸ் ஆப் டிபிகல்டிஸ்—களையவும், சம்பளத்தில் அமைவில் இருக்குமானால் —இருக்கிறது என்று ஓரளவு உணருகிறோம்—அதை மாற்ற முயற்சி எடுத்துக்கொள்வோம் என்று அரசாங்கத்தின் சார்பில் தெரிவித்துக் கொண்டு ஒத்திவைப்புத் தீர்மானங்களை அனுமதிக்கவேண்டிய அவசியம் இல்லையென்று பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

DR. H. V. HANDE : May I know whether it is possible to give them some sort of non-practising allowance because there is no possibility of their doing private practice. May I know since they cannot indulge in private practice, some non-practising allowance will be given ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : எந்த ஒரு கொள்கையையும் ஒரு அமைச்சர் கேள்விக்குப் பதிலாக அளிக்க முடியாது. கொள்கைப் பிரச்சினையை அரசு எதிர்காலத்தில் அதற்குரிய துறையினரோடு கலந்துதான் அது சம்பந்தமாக முடிவு எடுக்க முடியும்.

திரு. கே.டி.கே. தங்கமணி : கல்லூரியில் ஆராய்ச்சி நடத்துவதற்காக இந்த ஆண்டு மானியத்தில் 9 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த ஆண்டில் இம்மாதிரி காரணத்தால் ஏதாவது கொஞ்சம் அதிகமான செலவு இருந்தால் கூட எங்கள் சார்பில் அதை கண்டிப்பாக ஏற்றுக் கொள்ளுகிறோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு க. அன்பழகன் : எதிர்க் கட்சியினர் செலவழிப்பதற்கு ஆதரவு தருவதைப் போல் வரி போடும் நேரத்திலும் முழு ஆதரவைத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்குப் பிறகு இந்த ஒத்தி வைப்புத் தீர்மானங்களுக்கான அவசியம் இல்லை என்று கருதுகிறேன். ஆகவே, இவற்றுக்கான அனுமதி மறுக்கப்படுகிறது.

### 4. கவன ஈர்ப்பு

**கோவை மாவட்டத்தில் காங்கேயம் தொகுதியில் காட்டுக் கண்டங்கத்திரி என்ற களை வளர்ச்சியும் அதன் விளைவுகளும் குறித்து.**

Mr. SPEAKER : Now, the Hon. Member Thiru Kovai Chezhian will call the attention of the Hon. Minister for Agriculture to a matter of urgent public importance.

Thiru KOVAI CHEZHIAN : Sir, under Rule 41 of the Assembly Rules, I call the attention of the Hon. Minister for Agriculture to a matter of urgent public importance, viz.,

"the growth of the exotic weed by name 'Solanum Elagnea Folia' (காட்டுக் கண்டங்கத்திரி) in Coimbatore District, particularly in Kangayam Constituency which renders the soil unfit for any agricultural operation and the consequent fear in the minds of the agriculturists and the urgency and the necessity to take immediate efforts by Government to eradicate the nuisance".

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : கோயம்புத்தூர் மாவட்டத்தில் குறிப்பாக காங்கேயம் தொகுதியில் காட்டுக் கண்டங்கத்திரி என்ற திணைக்குப் புறம்பான புதுவிதமான களையொன்று நிலங்களில் வளர்ந்து வருவதனால், எவ்வித பயிர்த்தொழிலையும் மேற்கொள்வதற்கு அப்பகுதியிலுள்ள நிலம் ஏற்றதாயில்லை. இதன் விளைவாக உழவர்களுக்கு ஒரு வகையில் பீதி ஏற்பட்டுள்ளது. எனவே, இந்தக் களையை அறவே நீக்குவதற்கு அரசு உடனடி நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது அவசியமாகும்.

காட்டுக் கண்டங்கத்தரிக்காய் ஆழமாக வேரூன்றிச் செல்லும் ஒரு புதர்ச் செடியாகும். இக்களை ஆழமாக வேரூன்றிச் செல்லும் தன்மையால், கோயம்புத்தூர் மாவட்டத்தில் குறிப்பாக உடுமலைப் பேட்டைப் பகுதியிலுள்ள கரிசல் மண் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கண்டறியப்பட்டது. மண்ணைத் தோண்டுதல் அல்லது உழுதல் போன்ற சாதாரண நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் இதனை ஒழிப்பது கடினமென்று கண்டறியப்பட்டுள்ளது. ஏனென்றால், மண்ணைத் தோண்டுதல் அல்லது உழுதல் போன்ற செயல்களை மேற்கொண்டபிறகும் இச்செடிகள் வேர்களின் பாகங்களையும், சல்லி வேர்களையும் விட்டுச் செல்வதால் இவை மீண்டும் வளர முடிகிறது. இதனை அறவே ஒழிப்பதற்காக ஏற்ற இரசாயனக் கட்டுப்பாட்டு முறையில் அல்லது சேர்க்கையின் மூலம் தீர்வு காணும் பணி இன்னும் நடந்தேறி வருகிறது.

24-டி கலவைப் போன்ற களைக் கொல்லி மருந்துகளின் உதவியால் களைகள் ஒழிக்கப்படுகின்றன. இந்தக் கலவை மருந்தும் கண்டங்கத்தரிக்காய்ச் செடிகளின் தண்டுகளில் செலுத்தப்படுகின்றன. இந்த முறையில் இந்தக் களைகளை முற்றிலும் ஒழிக்க முடிகிறது என்று கண்டறியப்பட்டுள்ளது.

ஏக்கர் ஒன்றுக்கு 1·5 கிலோ கிராம் என்ற வீதத்தில் 24-டி சோடியம் உப்பு, ஏக்கர் ஒன்றுக்கு 1 லிட்டர் என்ற வீதத்தில் 24-டி அமினஸ் அல்லது ஏக்கர் ஒன்றுக்கு $\frac{1}{2}$ லிட்டர் என்ற வீதத்தில் 24-டி எஸ்டர்ஸ் மருந்தைப் பயன்படுத்துவதன் மூலம் பெருமளவிற்கு வளர்ந்துள்ள இந்தக் களைகளைத் திறம்பட நீக்கலாம். தொடர்ந்து இந்த மருந்தைத் தூவுவதன் மூலம் களைகளை அறவே ஒழிக்கலாம். களைகள் முழுவதையும் ஒழிக்க வேண்டுமானால் ஆண்டு ஒன்றுக்கு 4 அல்லது 5 முறை மருந்து தூவ வேண்டும். மேற்குறிப்பிட்ட களைக் கொல்லி மருந்துகள் பெரிதும் நச்சுத்தன்மை வாய்ந்தவையாகும். அண்டையில் அகன்ற இலைகளையுடைய தாவரங்களை இவை பெரிதும் பாதிக்கக்கூடும். எனவே, இந்த மருந்தைப் பயன்படுத்தும்போது அண்டை வயல்களில் அது புகுந்துவிடாதவாறு கவனமாக பார்த்துக்கொள்ள வேண்டும்.

களைகள் நிறைந்த நிலத்தில் களைக் கொல்லி மருந்து தெளிக்கப்பட்ட பிறகு, தரிசாக விடப்படவேண்டும் அல்லது அந்த களைக் கொல்லி மருந்துகளால் பாதிக்கப்படாத தானியப் பயிர்களை விளைவிக்கவேண்டும். மருந்து தூவப்பட்ட இந்த நிலத்தில் பருத்தி அல்லது பிற அகன்ற இலைப்பயிர்கள் சிறிது காலத்திற்குப் பயிரிடப்படக் கூடாது. ஏனென்றால், இந்தக் களைக் கொல்லி மருந்துகளின் எஞ்சியுள்ள வீரியம் அப்பயிர்களைப் பாதிக்கும்.

இந்தக் களையை ஒழிப்பதற்காகக் கீழ்க்கண்ட களைக் கொல்லி மருந்துகள் பயன்படுத்தப்படுகின்றன :—

ஹெக்சாமார் 2·4 டி.

பிளாடெக்ஸ் A (சோடியம் உப்பு).

பிளாடெக்ஸ் BC (எஸ்டர்ஸ்).

பிளாடெக்ஸ் BG (அமினி).

பெஞ்ஞேபின் 2·4 (சோடியம் உப்பு).

டபாசைடு 80.

இந்தக் களைக் கொல்லி மருந்துகள் வெளிச்சந்தையில் கிடைக்கின்றன.

இந்தக் களைக் கொல்லி மருந்துகள் பெரிதும் நச்சுத் தன்மை வாய்ந்தனவாகும். எனவே, அதனால் பாதிக்கப்படக் கூடிய அண்டை நிலங்களிலுள்ள தாவரங்களுக்கு (தானியப் பயிர்களாயிராத தாவரங்களுக்கு) அவை பரவாதவாறு பார்த்துக் கொண்டு அவற்றைக் கவனமாகப் பயன்படுத்த வேண்டும். தனித்தனி தூவுக் கருவிகளைப் பயன்படுத்த வேண்டும். ஏனென்றால் 2, 4-டி மருந்தைக் கருவியிலிருந்து முழுவதும் நீக்க முடியாது. இதற்கென உழவர்களுக்குத் தேவைப்படும் தூவு கருவிகளை வேளாண்மைத் துறை வாடகைக்கு வழங்குகிறது.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் காட்டுக் கண்டங்கத்தரிக்காய் என்ற வகைகளை களை ஒழிப்பதற்கான திட்டம் ஒன்றைச் செயல்படுத்தக் கருதப் பட்டுள்ளது.

திரு. கோவை செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 24-டி கலவையை மூன்று முறை அடித்தால் போய் விடும் என்று சொல்லுகிறார்கள். அப்படி அடித்தும்கூட அந்தச் செடிகள் போவதில்லை. அதிகமாக வளர்ந்து கொண்டு வருகிறது. மேலும் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட அந்த மருந்துக் கலவைகள் மார்க்கெட்டில் கிடைப்பதில்லை. அது வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியாகவேண்டு மென்று சொல்லப்படுகிறது. கோவையில் இருக்கும் ரிசர்ச் சென்டருக்கு இதற்கு என்று தனியாக நிதி ஒதுக்கி இந்த அபாயகரமான செடிகளின் களைகளைக் களைவதற்குத் தனியாக முயற்சி எடுத்தாலொழிய எந்தப் பலனும் கிடைக்காது. அதற்கான முயற்சியை அரசு உடனடியாக எடுக்குமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: இதற்கான முயற்சிகளை எடுத்து வந்தாலும்கூட, இதை அறவே ஒழிக்கும் முறை கடினமாக இருக்கிறது. செடிகள் மேலே மூன்று அடி வளர்ந்திருந்தால் கீழேயும்